# இலங்கை மத்திய வங்கி

## வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

| 2020 மே 13 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2020இன் 03ஆம் இலக்கம் |
|---|---|---|

---

### உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

கொவிட்-19 பரவலின் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) திரவத்தன்மை மற்றும் ஏனைய முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மீதும் ஏற்படக்கூடிய சாத்தியமான மோசமான தாக்கத்தினையும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் திரவத்தன்மையினைப் பொருத்தமான மட்டங்களில் பேணுகின்ற அதேவேளையில் காசுப்பாய்ச்சலை முன்மதியுடன் முகாமை செய்வதன் முக்கியத்துவத்தினையும் பரிசீலனையில் கொண்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளின் மீது இத்தால் இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. அதிகாரமளித்தல் | 1.1 | திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, உரிமம்பெற்ற அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதேனுமொரு வங்கிக்கு எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிக்கு அல்லது வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. |
| 2. பிரயோக செயற்பரப்பு மற்றும் காலம் | 2.1 | இப்பணிப்புரைகள் பின்வரும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்:<br>(i) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவை அல்லது நிறுவப்பட்டவை, அத்துடன்<br>(ii) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவை அல்லது நிறுவப்பட்டவை. |
| | 2.2 | இப்பணிப்புரைகள் உடனடியாக நடைமுறைக்கு வருதலாதல் வேண்டுமென்பதுடன் 2020 திசெம்பர் 31 வரை பிரயோகிக்கப்படத்தக்கதாக இருத்தலும் வேண்டும். |
| 3. தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் | 3.1 | 2019 நிதியியல் ஆண்டிற்கான ஏற்கனவே பிரகடனம் செய்யாத காசுப் பங்கிலாபங்களையும் 2020 நிதியியல் ஆண்டிற்கான இடைக்கால காசு பங்கிலாபங்களையும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் அவ்வாறு பிரகடனம் செய்வதனைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |
| | 3.2 | 2019 மற்றும் 2020 நிதியியல் ஆண்டுகளுக்கான இலாபங்களை ஏற்கனவே பிரகடனம் செய்யாத, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இலாப மீளனுப்பல்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |
| | 3.3 | உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் சொந்தப் பங்குகளை மீண்டும் வாங்குவதனைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |
| | 3.4 | உரிமம்பெற்ற வங்கிகள் முகாமைத்துவப் படிகளையும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிப்பதிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டும். |

3.5 உரிமம்பெற்ற வங்கிகள் முன்மதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதுடன் விளம்பரப்படுத்தல்கள், வியாபார மேம்படுத்தல்கள், அநுசரணைகள், பயணம் மற்றும் பயிற்சியளித்தல் போன்ற அத்தியாவசியமல்லாத செலவினங்களை செய்வதிலிருந்து முடிந்தவரை விலகியிருத்தல் வேண்டும்.

3.6 உரிமம்பெற்ற வங்கிகள் ஏதேனும் மூலதனச் செலவினங்கள் உறப்படும் பொழுது தீவிரமான நெருங்கிய கவனிப்புடனும் முன்மதியுடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்